தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை– 6

ந.க.எண்: 040673/எம்1/இ1/2026 நாள்: .07.2026

பொருள்: பள்ளிக் கல்வி – தேசிய தொழுநோய் ஒழிப்பு திட்டம் (National Leprosy Eradication Programme – NLEP) – 2026–2027ஆம் கல்வியாண்டில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு தொழுநோய் அறிகுறி கண்டறிதல் பரிசோதனை (Leprosy Screening) மேற்கொள்ளுதல் – சுகாதாரத் துறையினருக்கு முழு ஒத்துழைப்பு வழங்குதல் – அறிவுரைகள் வழங்குதல் – சார்பு

பார்வை : பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, கூடுதல் இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் – தொழுநோய்), சென்னை–6 அவர்களின் கடித எண் 9/NLEP/HE/2026–27, நாள்: 18.06.2026.

பார்வையில் காணும் கடிதத்தில், தேசிய தொழுநோய் ஒழிப்பு திட்டத்தின் கீழ், 2026–2027ஆம் கல்வியாண்டில் அனைத்து வகை பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு தொழுநோயின் ஆரம்பகால அறிகுறிகளை கண்டறியும் வகையில் தொழுநோய் அறிகுறி கண்டறிதல் பரிசோதனை (Leprosy Screening) மேற்கொள்ளப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரிசோதனைக்கான தேதி மற்றும் நேரம் தொடர்புடைய வட்டார மருத்துவ அலுவலர் / ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலரால் பள்ளிகளுக்கு தெரிவிக்கப்படும். மேலும், இப்பணிகளை சம்பந்தப்பட்ட மாவட்ட துணை இயக்குநர் (மருத்துவப் பணிகள் – தொழுநோய்) ஒருங்கிணைத்து செயல்படுத்துவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், தங்களது கட்டுப்பாட்டில் செயல்படும் அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் தேவையான அறிவுரைகளை வழங்கி, தொழுநோய் அறிகுறி கண்டறிதல் பரிசோதனையை சுகாதாரத் துறையினர் மேற்கொள்ளும் போது அவர்களுக்கு தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் வழங்கிடவும், மாணவர்களின் முழுமையான பங்கேற்பை உறுதி செய்திடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக் கல்வி இயக்குநர்

28/07/26

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்,

அனைத்து மாவட்டம்.